செ.வெ.எண்.440 நாள்.04.09.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**பள்ளி, கல்லூரிகளில் ராக்கிங் நடவடிக்கைகளை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

************

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் ராக்கிங்கில் ஈடுபடாமல் தடுப்பதற்கு அந்தந்த கல்லூரி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அனைத்து அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் ராக்கிங் குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் புகார் தெரிவிக்க ஏதுவாக புகார் மனு பெட்டிகள் வைக்க வேண்டும். புகார்களை ஆன்லைன் மூலமும் தெரிவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உடனடியாக புகார் தெரிவிக்க தொலைப்பேசி எண்களையும் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். மாணவர்களிடையே ராக்கிங் கொடுமையால் ஏற்படும் பாதிப்புகள், விபரீத நிகழ்வுகள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். அனைத்து மாணவர்களிடம் கருத்து வேறுபாடின்றி ஒற்றுமையுடன் சகோதர மனப்பான்மையுடன் அன்புடன் பழக வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ராக்கிங் நடைபெறாமல் தடுப்பதற்கு உரிய கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

கல்வி நிறுவனங்களில் கண்காணிப்பு குழுக்கள் அமைத்து தவறிழைக்கும் மாணவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவல்துறையினருக்கு தகவல் அளித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பெற்றோரிகளிடம், ஆசிரியர்கள் கூட்டம் நடத்தும் போது காவல் துறை அலுவலர்களையும் அழைக்க வேண்டும். விடுதிகளிலும், கல்வி நிறுவன பேருந்துகளிலும் கண்காணிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, சார் ஆட்சியர் மதுராந்தகம் திரு.கில்லி சந்திரசேகர் இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.வீரமணி, கோட்டாட்சியர் தாம்பரம் திரு.சந்திரசேகர், துணை காவல் கண்காணிப்பாளர் (காஞ்சிபுரம்) திரு.முகிலன், துணை காவல் கண்காணிப்பாளர் (வண்டலூர்) திரு.அன்னாதுரை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கி வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவ கல்லூரிகள் மற்றும் செங்கல்பட்டு அரசு சட்ட கல்லூரி நிர்வாக முதல்வர்கள்/பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுலவர்,
காஞ்சிபுரம்.